1973 பிப்ரவரி 13]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வடார்க்காடு மாவட்டத்தில் இருக்கிறது. யார் யார் அதிலே மனுப் போட்டு அனுமதி பெற்றிருக்கிருர்கள் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. எஸ். முருகையன் : இந்தக் கறுப்புக் கற்களை வெளி மாநிலங்களில் இருந்து வந்து எடுத்துக் கொண்டு போகிருர்கள். அதையாவது தடை செய்து இந்த மாநிலத்திலுள்ள அதுபோன்ற தொழில் செய்பவர்களுக்குக் கொடுக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அண்மையில் இதுபற்றி பரிசீலித்து தமிழ்நாட்டில் இதைக் கொண்டு தொழில் செய்யத் தொடங்குபவர்களுக்குத் தான் இதை க்வாரியிங் செய்கிற அனுமதி தரப்படவேண்டுமென்று ஒரு விதியை நம் அரசு பிறப்பித்திருக்கிறது.

நாரணமங்கலம் சாலை

*149 வினு—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதியில் வில்லியநல்லூரிலிருந்து மணல்மேடு வரை உள்ள பாதையில் நாரணமங்கலம் அருகே கப்பிச்சாலை போடும் பணி இன்னும் நிறைவேற்றப்படாததற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச்சாலையை மேம்பாடு செய்வதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா : மாயூரத்திலிருந்து நாரணமங்கலம் வழி மணல் மேடு செல்லும் வழி நான்கு மைல் தூரத்திற்குக் குறைவாக இருக்கிறது. இதில் ஒரு மைல் நீளத்திற்கு நாரணமங்கலம் பகுதியில் சாலை இல்லாததால் போக்கு வரத்திற்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது என்ற அடிப்படையில் அதை விரைந்து செயல்படுத்த அரசு ஆலோசிக்குமா என்று அறியவிரும்புகிறேன். அதோடுகூட அதை ஊராட்சி ஒன்றியம் செய்யவேண்டியிருக்கிறது என்று கருதுகிறேன். அந்த ஒன்றியத்திற்கு அத்தகைய அறிவிப்பை அரசு உடனடியாக அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் இது ஒன்றியச் சாலை. அது நான்கு கிலோமீட்டர் நீளமுள்ளது. Under the Intensive Agricultural Development Programme in Thanjavur, Tiruchi and South Arcot அதில் சேர்ப்பதற்